நீதிமன்றப் படிவ எண்.53
(விதி 42–ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
மகிளா நீதிமன்றம் , கடலூர்
அமர்வு வழக்கு எண். 127/2020

அரசு தரப்புக்காக அ. சா.3 சாட்சியின் சான்றுரைகள்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாரதிதாசன் | தொழில்/ பதவி | |
| கணவர்/தந்தை பெயர் | | வயது | |
| கிராமம் | | வட்டம் | |
| சாட்சிப்பட்டியலில் வரிசை எண் : L.W. 3 | | | |

எதிரி ஆஜரில் இருந்தார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 25th day of June 2025.

**முதல் விசாரணை**– (ஆரம்பிக்கப்பட்ட நேரம் 12.09 )

நான் தற்போது சிதம்பரம் லால்புரம் என்ற கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் ஊராட்சி செயலராக பணிபுரிகிறேன். அ.சா.1 எனது அண்ணன் மனைவி. அ.சா.2 எனது அண்ணி. ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். தவசுந்தரியின் கணவர். ஆஜர் எதிரிக்கும் தவசுந்தரிக்கும் 15.07.2018 ஆம் தேதி திருமணம் நடைபெற்றது. அதன்பிறகு தவசுந்தரி கணவர் வீட்டில் 10 நாளும் தவசுந்தரி அம்மா வீட்டில் 20 நாளும் பிரச்சனை என்று வந்துவிடுவார். எதிரி அடிக்கடி குடித்துவிட்டு வந்து சீட்டு விளையாட பணம் கொடு நகை கொடு என்று கேட்பதால் தகராறு. 03.06.2020 நாட்டாமங்கலத்தை சேர்ந்த பாலமுருகன் என்பவர் தவசுந்தரிக்கு உடம்பு சரியில்லை என்று காட்டுமன்னார்கோவில் ஜிஎச் மருத்துவமனையில் சேர்த்துள்ளார்கள் என்று என்னிடம் 03.00 மணிக்கு சொன்னார். உடனே 03.00 மணிக்கு நான் தவசுந்தரியின் அம்மா விமலாவிற்கு போன் செய்து இந்த விவரத்தை

சொன்னேன். விமலா சீர்காழி பக்கத்தில் ஒரு இடத்தில் பூ விற்றுக்கொண்டு இருந்தார். அதன்பிறகு அவர் சிதம்பரம் வந்துவிட்டார். நாங்களும் சிதம்பரம் சென்றோம். பஸ் இல்லை என்பதால் ஆட்டோ பிடித்து காட்டுமன்னார்கோவில் ஜிஎச் மருத்துவமனைக்கு இரவு 08.00 மணிக்கு சென்றோம். அங்கு தவசுந்தரி இறந்த நிலையில் பெட்டில் கிடந்தார். நாங்கள் அங்கிருந்த நர்சை கேட்டபோது தவசுந்தரியை பிரேம்குமார், அவருடைய அம்மா, இன்னொரு பையன் ஆகிய மூன்று பேரும் ஆஸ்பித்திரியில் சேர்த்தார்கள் என்றும் நாங்கள் தவசுந்தரி வரும்போதே இறந்துவிட்டார் என்று சொன்னதும் அந்த மூவரும் வெளியே சென்று விட்டார்கள் என்றும் அதன்பிறகு பிரேம்குமாரின் அம்மா வந்து தவசுந்தரி அணிந்திருந்த நகையை கழட்ட வந்தபோது ஆஸ்பித்திரியில் இருப்பவர்கள் நகையை கழட்ட கூடாது என்று சொன்னபோது எனது மருமகள் தான் என்று சொல்லி பிரேம்குமாரின் அம்மா கழட்டி எடுத்துக்கொண்டதாக சொன்னார்கள். திரும்பிவந்து காட்டுமன்னார்கோவில் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம். போலிசாரும் சப் கலெக்டரும் என்னை விசாரித்தார்கள். போஸ் மார்டம் செய்து தவசுந்தரியின் உடலை எங்களிடம் கொடுத்துவிட்டார்கள். ஆஜர் எதிரியின் பிரேம்குமாரின் வீட்டிற்கு எடுத்து போக வேண்டாம் என்றும் எதும் பிரச்சனை நடக்கும் என்று சொன்னதால் கீழ்அனுவம்பட்டு அந்த பெண்ணின் தாயார் வீட்டிற்கே எடுத்து சென்று அடக்கம் செய்துவிட்டோம்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

லால்புரத்தில் எத்தனை வருடங்களாக வசிக்கிறேன் என்றால் 2025 ஆம் ஆண்டு தான் லால்புரத்திற்கு வந்தேன். அதற்குமுன்பு வண்டிகேட் என்ற ஊரில் 14 வருடம் வசித்தேன். சிதம்பரத்தில் உள்ள வண்டிகேட் என்ற ஊரில் இருந்து நாட்டார் மங்கலம் எவ்வளவு தூரம்  இருக்கும் என்று கேட்டால் 20 கி.மீ துரம் இருக்கும். தவசுந்தரி இறந்த சமயத்தில் நான் வண்டிகேட்டில் தான் இருந்தேனா என்றால் ஆமாம். தவசுந்தரி எப்படி இறந்தார் என்பது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். பாலமுருகன் போன் செய்த எண்ணைப் பற்றி போலிஸ் விசாரணையில் சொன்னேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. பாலமுருகன் எனக்கு போனே செய்யவில்லை என்றும் செய்திருந்தால் அந்த எண்ணை பற்றி போலிஸ் விசாரணையில் சொல்லிருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரியும் தவசுந்தரியும் எங்கு வசிக்கிறார்கள் என்று எனக்கு

தெரியாது என்றால் சரியல்ல. அவர்களுக்கு இடையே பிரச்சனை ஏற்பட்டது சம்மந்தமாக நாங்கள் 2 முறை பிரேம்குமார் வீட்டிற்கு சென்று சமாதானம் செய்தோம். ஆஜர் எதிரிக்கும் தவசுந்தரிக்கும் ஏற்கனவே இருந்த பிரச்சனை சம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோமா என்றால் குடும்ப பிரச்சனை என்பதால் புகார் கொடுக்கவில்லை. தவசுந்தரி இறந்தது சம்மந்தமாக விமலா தான் புகார் கொடுத்தார். நான் கொடுக்கவில்லை. தவசுந்தரி வயிற்றுவலியால் தான் தற்கொலை செய்துகொண்டார்என்றும் ஆஜர் எதிரியுடன் சந்தோஷமாகத்தான் வாழ்ந்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. இறந்துபோன தவசுந்தரி எனது உறவினர் என்பதால் அவருக்கு அனுசரணையாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை

(முடிக்கப்பட்ட  நேரம் 12.26)

2025 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 25 ஆம் நாளன்று, 1969–ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கிறேன்.

சாட்சியின் கையொப்பம்

*" என்னால்/என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."*

Sd/–G.Kulasekaran
அமர்வு நீதிபதி,
மகிளா நீதிமன்றம்,
கடலூர்.